1981 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. ஏ. எம். சேதுராமன்: பேரவைத் தலைவரவர்களே, வேளாண்மை பற்றி விளக்குவதற்காக எண்ணை மூலதனப் பண்ணை எவ்வாண்டு துவக்கப்பட்டது என்பதையும் அந்தப் பண்ணை எதனாலே செயலற்றுக் கிடக்கிறது என்பதையும் இதுபோன்ற பண்ணைகள் தமிழ்நாட்டில் எத்தனை இருக்கின்றன என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, எப்போது துவக்கப்பட்டது, எத்தனை பண்ணைகள் போன்ற விவரங்கள் எல்லாம் தற்போது என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை போன்று ஆற்காடு தாலுக்காவில் முல்லுவாடி என்ற கிராமமே இல்லை. துரைவாடி நகரம் என்ற இடத்தில் தான் எண்ணை மூலவிதைப் பண்ணை இருக்கின்றது. அது செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றது.

திரு. ஏ. எம். சேதுராமன்: தலைவரவர்களே, இது போன்ற எண்ணெய் மூலவிதைப் பண்ணைகளை மேலும் உருவாக்குவதன் காரணமாக சூரியகாந்தி எண்ணெய் விதைகளை விவசாயிகளுக்கு அளித்து விவசாயத்திற்கும் உதவி செய்து, சூரியகாந்தி எண்ணெய் தமிழ்நாட்டில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக இருப்பதால் அந்த எண்ணெய் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும் மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து வேண்டிய நடவடிக்கையை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இது போன்ற கருத்துக்களை ஆராய்ந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் எண்ணெய் விதைக் கென்று தனி இயக்ககமே தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றது.

முடையூரிலிருந்து பெரிய தச்சூர் செல்லும் சாலையினை சீர் செய்தல்

*வினா எண் 601: திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், முடையூரில் இருந்து கம்பந் தூர், கீழ் பாப்பாம்பாடி, கீழ் மாம்பட்டு, அணிலாடி, பிடாரிபட்டு வழியாக பெரிய தச்சூர் செல்லுகின்ற சாலையை கரும்பு உற்பத்தி சாலைத் திட்டத்தின் கீழ் எடுத்து சீர் செய்ய உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் முடையூரில் இருந்து கம்பந்தூர், கீழ் பாப்பாம்பாடி, கீழ் மாம்பட்டு, அணிலாடி பிடாரிபட்டு வழியாக பெரிய தச்சூர் செல்லுகின்ற சாலையை கரும்பு உற்பத்தி திட்டத்தின் கீழ் சீர் செய்யமுடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டிருக்கின்றார்கள். ஆனால் இப்போது அந்தத் திட்டம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் வருங்காலத்திலேயாவது அதனுடைய அவசியத்தை எண்ணிப்பார்த்து அந்தச் சாலையைச் சீர் செய்ய உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இந்தச் சாலையைப் பற்றி அந்த இடத்திலே உள்ள சவுத் இன்டியா சர்க்கரை ஆலையில் இருந்து பரிந்துரை ஏதும் அரசுக்கு அனுப்பவில்லை. அவர்கள் அனுப்பி வைத்தால் ஆராயப்படும்.

வேதாரண்யம் வேளாங்கண்ணி சாலைப் பாலத்தில் சுங்கம் வசூல் செய்தல்

*வினா எண் 602 : திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம்-வேளாங்கண்ணி சாலையில் கட்டப்பட்ட பாலத்தில் கடந்து செல்லும் வாகனங்களுக்கு சுங்கம் வசூல் செய்யப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதை நிறுத்திவிடும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

Township for Nagoor

* Q. No. 603—THIRU R. UMANATH : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(a) Whether there is any proposal under consideration to constitute a township for Nagoor town in Nagapattinam taluk; and

(b) if so, the details there of ?